1974 ஏப்ரல் 4]

திரு. கே. டி. கே. தங்கமணி: பாம்பன் பாலம் மாதிரி இந்த ஈஸ்ட் கோஸ்ட் ரோடு எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிற ஒன்று. இது இரண்டு மூன்று ஆண்டுகளாக நடந்துகொண்டிருக்கிறது. இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்த ரோடுக்கான முழுப் பணமும் கிடைக்கவில்லை. இடையில் இருக்கிற பாலங்களைக் கட்டுவதற்கான வேலைகள்தான் இப்போது நடைபெற்று வருகின்றன.

New bridge across Coleroon.

* 752 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct a new bridge at Coleroon connecting Srirangam and Tiruchirappalli; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) தேசிய நெடுஞ்சாலை 45-ல் மைல் 193/2 (கி.மீ. 312/8)ல் கொள்ளிட நதியின் குறுக்கே 64.116 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய பாலம் கட்ட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மத்திய அரசு எப்போது அனுமதி அளித்தது? வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேசிய நெடுஞ்சாலையில் வருவதால் எஸ்டிமேட் தயாரித்து டெல்லி போக வேண்டும். பின்னர் டெண்டர் கால்பார் பண்ணி போக வேண்டும்—இப்படி ஒவ்வொன்றுக்கும் அவர்கள் ஒப்புதல் பெற வேண்டியிருப்பதால் நம் மாநிலத்தில் மட்டுமல்ல—எல்லா இடங்களிலும் தேசிய நெடுஞ்சாலை வேலை தாமதம்தான் ஆகும். அதைத் தவிர்க்க முடியாது.

New over bridge at Coimbatore.

* 753 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Public Works with reference to question No. 82 answered on 11th August 1973 be pleased to state the estimated cost of the proposed construction work of the over bridge near the bus stand in Coimbatore town?